**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | |
|---|---|
| Calendar Case No: | CC. 238/2016 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா.2 |
| Name : | திருமதி. முத்தம்மாள் |
| Father's Name/Husband Name: | திரு. பச்சமுத்து |
| Village : | தேவையூர் |
| Taluk : | வேப்பந்தட்டை |
| Age : | 56/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 07.01.2026

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. S. தினேஷ், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**( எதிரிகள் 1 ரமேஷ் 2 கோபால் ஆஜர்)**

**முதல் விசாரணை**

1(i) நான் தற்போது தேவையூர் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் வேலை செய்து வருகிறேன். சாட்சி பச்சைமுத்து என்னுடைய கணவர் ஆவார். ஆஜர் எதிரிகளை தெரியும். கடந்த 2012ம் வருடத்தில் ஒரு நாள் நான் தேவையூரில் உள்ள எனது வயல்காட்டில் பருத்தி விதை மதியம் 12 மணியளவில் விதைத்துக் கொண்டிருந்தேன். அப்போது ஆஜர் 1ம் எதிரி அங்கே வந்து இது எங்கள் காடு என்று கூறி நான் விதைத்த பருத்தி விதையை பிடுங்கி எறிந்துவிட்டு அசிங்கமான வார்த்தைகளான கண்டார ஓழி, வல்லார ஓழி என்று பேசி வேப்பங்கட்டை குச்சியால் அடித்தார். என்னுடைய மண்டை உடைந்துவிட்து. கோபால் என்பவர் பச்சைமட்டையால் என்னை அடித்தார். அப்போது என்னுடைய கணவரை ரமேஷ் என்பவர் உயிர்நிலையில் உதைத்தார். என் கணவர் கீழே விழுந்துவிட்டார். ரமேஷ் என் கணவரை கண்ணத்தில் அடித்தார். எனக்கு மண்டை உடைந்துவிட்டது. நாங்களாக மருத்துவமனைக்கு சென்றோம். எதிரிகள் இருவரும் எங்களுடைய சொத்தை

எங்களை அடித்துவிட்டு எடுத்துச் செல்லும் நோக்கத்தில் அங்கு வந்தார்கள். வேறு எதுவும் சொல்லவில்லை. காயத்திற்காக மருத்துவமனையில் சிகிச்சையிலிருந்த போது போலிசார் விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்றார்கள். அதில் நான் கைரேகை வைத்தேன். நான் மயக்கநிலையில் இருந்தேன். போலிசாரிடம் புகார் வாக்குமூலம் நான் தான் கொடுத்தேன். **புகார் வாக்குமூலம் அ.சா.ஆ1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை**

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-xxxxxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.